**பத்திரிகை வெளியீடு**

கொழும்பு, 19 செப்டெம்பர் 2017

Good Food, Good Life

## அதிக வாசனைத்திரவியங்கள், அதிக சுவை: *Maggi* நூடில்ஸ் தற்போது அதிக வாசனைத்திரவியங்களுடன் மேம்பட்ட சுவை மற்றும் நலச்செழுமையை வழங்குகின்றது

நெஸ்லே நிறுவனத்தின் தனித்துவமான *Maggi* வர்த்தகநாமம், பிரபலமான தனது சிக்கன் சுவை கொண்ட நூடில்ஸ் உற்பத்தியை மேம்படுத்தும் வகையில் எட்டு வகையான வாசனைத்திரவியங்களை சேர்ப்பித்து அதற்கு புது வடிவம் கொடுத்துள்ளது. கறி வகைகள் மற்றும் ஏனைய வீட்டு உணவுகளுக்கு வாசனைத்திரவியங்கள் பொதுவாக இயற்கையான சுவையூட்டிகளாக உபயோகிக்கப்படுகின்ற எமது நாட்டில், *Maggi* தனது நூடில்ஸ் உற்பத்திக்கு புது வடிவம் கொடுப்பதிலும் அதே பாணியையே பின்பற்றியுள்ளது. தனது நூடில்ஸ் உற்பத்தி வரிசைக்கு சுவையைச் சேர்ப்பிப்பதற்கு இலங்கையில் சமையலறைகளில் பாரம்பரியமாக உபயோகிக்கப்படுகின்ற மரக்கறி வகைகள், மூலிகைகள் மற்றும் பிரபலமான வாசனைத்திரவியங்களை அது பயன்படுத்தியுள்ளது.

*Maggi* மேற்கொண்டு வந்துள்ள தொடரான உற்பத்தி புத்தாக்க முயற்சிகளின் வரிசையில் சமீபத்தைய முயற்சியாக இது அமைந்துள்ளது. வழமையாக சமையலறை அலுமாரிகளில் காணக்கூடிய அதிக இயற்கையான மற்றும் பரிச்சயமான சேர்க்கைப் பொருட்களைக் கொண்ட தெரிவுகளை உள்நாட்டில் நுகர்வோர் விரும்புகின்ற நிலையில் அதனை ஈடு செய்யும் வகையில், இந்த வர்த்தகநாமம் கடந்த ஆண்டில் தனது உற்பத்தி வரிசைக்கு மறுவடிவம் கொடுக்கும் முயற்சிகளை ஆரம்பித்திருந்தது. ஆரோக்கியமான மற்றும் மகிழ்ச்சிகரமான வாழ்வுக்கு இடமளிக்கவேண்டும் என்ற, நெஸ்லே நிறுவனத்தின் சர்வதேச மட்டத்திலான அர்ப்பணிப்பிற்கு இணங்க, அதிக சுவை கொண்ட மற்றும் அதிக ஊட்டச்சத்து நிறைந்த தெரிவுகளை வழங்கி, ஊக்குவிக்கும் வகையில் *Maggi* புதிதாக ஆரம்பித்துள்ள "Simply Good" முன்னெடுப்பின் ஒரு அங்கமாகவே இந்த முயற்சி அமைந்துள்ளது.

கொத்தமல்லி, ஏலக்காய், மஞ்சள், சீரகம், மிளகு, கராம்பு மற்றும் வெந்தயம் போன்ற பிரபலமான வாசனைத்திரவியங்களை புதிய *Maggi* சிக்கன் சுவையூட்டப்பட்ட நூடில்ஸ் கொண்டுள்ளது. நூடில்ஸிற்குப் புறம்பாக, தினசரி சமையலில் அனைத்து பதப்படுத்தல் தேவைகளுக்கும் உபயோகிக்கப்படுகின்ற *Maggi Rasa Musu* உற்பத்தியும் வெள்ளைப்பூண்டு, மிளகாய், மற்றும் மஞ்சள், சீரகம், மிளகு, கராம்பு, வெந்தயம் அடங்கலாக வாசனைத்திரவியங்களின் தனித்துவமான கலவையை உள்ளடக்கியுள்ளது.

நெஸ்லே லங்கா நிறுவனத்தின் உணவு உற்பத்திப் பிரிவிற்கான பிரதித் தலைமை அதிகாரியான பிரியதர்ஷினி கருணாரட்ன அவர்கள் கூறுகையில், *"வர்த்தகநாமத்தைப் பொறுத்தவரையில் இது ஒரு முக்கியத்துவம் வாய்ந்த சாதனை இலக்காகும். தமக்குப் பிரியமான Maggi உற்பத்திகள் தற்போது வாசனைத்திரவியங்கள் மற்றும் மரக்கறி வகைகள் போன்ற, தாங்கள் அறிந்துள்ள, நேசிக்கின்ற சேர்க்கைப்பொருட்களுடன் மேம்படுத்தப்பட்டுள்ளதையிட்டு Maggi பிரியர்கள் அனைவரும் மிகுந்த மகிழ்ச்சி அடைவர் என நான் நிச்சயமாக நம்புகின்றேன். எமது நுகர்வோருக்கு தொடர்ந்தும் சுவையான மற்றும் அதிக ஊட்டச்சத்து நிரம்பிய சமையல் தீர்வுகளை தொடர்ச்சியாக வழங்க எதிர்பார்த்துள்ளோம்,"* என்று குறிப்பிட்டார்.

குறிப்பாக அத்தியாவசிய நுண்ஊட்டச்சத்துக்களின் அன்றாட நுகர்வு, தேவையான மட்டங்களிலும் பார்க்க பெரும்பாலும் குறைவாகக் காணப்படுகின்ற இலங்கை போன்ற நாடுகளில், ஊட்டச்சத்து வலுவூட்டல் என்பது *Maggi* இன் அர்ப்பணிப்புடனான ஈடுபாட்டில் மற்றுமொரு முக்கிய கூறாக உள்ளது. இலங்கையிலுள்ள நெஸ்லே தொழிற்சாலையில் உற்பத்தி செய்யப்படுகின்ற *Maggi* நூடில்ஸ் உற்பத்தி வரிசையானது தேவைக்கேற்றவாறு கல்சியத்தின் செழுமை நிரம்பியுள்ளதுடன், *Maggi Rasa Musu* ஆனது இரும்புச்சத்தின் செழுமை நிரம்பியது.

ஆரோக்கியமான சமையல் மீதான கவனம் தொடர்ந்தும் அதிகரித்துச் செல்லும் நிலையில், Simply Good திட்டமானது *Maggi* உற்பத்தி வரிசையில் சேர்க்கப்படுகின்ற உப்பின் அளவைக் குறைப்பதில் தொடர்ந்தும் கவனம் செலுத்தும்.

உற்பத்தி மாற்றங்களுடன் சேர்ந்து, ஆரோக்கியமான மற்றும் மகிழ்ச்சிகரமான வாழ்வுக்கு உதவும் உணவுப் பழக்கவழக்கங்களை ஊக்குவிக்கும் முயற்சிகளை *Maggi* “Simply Good” முன்னெடுத்து வருகின்றது. பக்கட்டில் பொறிக்கப்பட்டுள்ள மற்றும் இணையத்தின் மூலமான ஆலோசனை மற்றும் உணவுத் தயாரிப்பு குறிப்புக்கள் மற்றும் *Maggi* Rasa Charika சமையல் கண்காட்சி போன்ற உள்நாட்டு நிகழ்வுகள், மக்களுக்கு ஆரோக்கியமான மற்றும் திறன்மிக்க வழியில் சமைப்பதற்கு வழிகாட்டி உதவுகின்றன. சமநிலை உணவின் ஒரு அங்கமாக, சுவையான உணவுகளை சமைப்பதனை இளம் தலைமுறையினர் மத்தியில் ஊக்குவிப்பதற்காக, *Maggi* இன் முகநூல் பக்கமான https://www.facebook.com/MAGGISriLanka/ ஆனது *Maggi* இனைக் கொண்டு இலகுவாக தயாரிக்கக்கூடிய உணவு வகைகளின் சமையல் குறிப்புக்களை வழங்குகின்றது.

நெஸ்லே லங்கா நிறுவனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளரான ஷிவானி ஹெக்டே அவர்கள் கூறுகையில், *“வாழ்க்கைத்தரத்தை மேம்படுத்தி, ஆரோக்கியமான எதிர்காலத்திற்குப் பங்களிப்பதன் மீது நாம் கொண்டுள்ள அர்ப்பணிப்புடனான ஈடுபாட்டின் ஒரு அங்கமாக எப்போதும் சுவையான மற்றும் அதிக ஊட்டச்சத்து நிரம்பிய தெரிவுகளை நாம் வழங்கிவருகின்றோம். புத்தம்புதிய சேர்க்கைப்பொருட்களுடன் மக்கள் சிறந்த உணவுகளை சமைப்பதை நாம் தொடர்ந்தும் ஊக்குவிப்பதுடன், பெரும்பங்கான மக்கள் மத்தியில் அதிக ஊட்டச்சத்தை வழங்குவதற்கு எம்முடன் சம்பந்தப்பட்ட அனைத்துத் தரப்பினருடனும் இணைந்து செயற்படுவோம்,”* என்று குறிப்பிட்டார்.